198 மார்ச் 12] [பேரவைத் துணைத் தலைவர்]

தங்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால் அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி, திரு. கரு. சீமைச்சாமி ஆகியோர் தங்கள் இடத்தில் இல்லாமையினால் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படும்.

அடுத்து , அவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் : 15.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,25,34,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வை. சுவாமிநாதன் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தாமையினால் அவ் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் : 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்"

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று பேரவை நாளை காலை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

97. Notification issued with G.O. Ms. No. 1324, Revenue, dated the 28th July 1967, effecting a ryotwari settlement to the inam estates specified in the schedule of the notification and situated in Salem district in accordance with the provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [*Laid on the Table of the House under sectibn* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963.)]

B. Reports, Notifications and other papers.

*33. A policy note on the Demand No. XVIII—the Animal Husbandry (Tamil).

*34. A Review on the progressmade in the Madras Forest Department (Tamil).

*35. A policy note on the Fisheries (Tamil).

---

*Despatched to all Members on 8th March 1968.